## கொடைக்கானலுக்கு புதிய மாற்று வழிச்சாலை உருவாக்கப்பட வேண்டும்!

# அடுத்த தலைமுறை அறிவோடு வளர வேண்டும் என்பதையே இந்த பட்ஜெட் பிரதிபலிக்கிறது!

## சட்டப்பேரவையில் ஐ.பி.செந்தில்குமார் பேச்சு!

சென்னை, மார்ச் 18 –

**கொடைக்கானலுக்கு புதிய மாற்று வழிச்சாலை உருவாக்கப்பட வேண்டும் என்றும் இந்த பட்ஜெட் அடுத்த தலைமுறை அறிவோடு வளர வேண்டும் என்பதையே பிரதிபலிக்கிறது என்றும் பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் பேசுகையில் பழனி தொகுதி உறுப்பினர் ஐ.பி.செந்தில் குமார் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

பேரவையில் கழக உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார்: பேசியதாவது:-

'எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்'

என்கிற வள்ளுவப் பெருந்தகையின் 582-வது குறளுக்கேற்ப எல்லா தரப்பு மக்களுக்கும் எப்படியெல்லாம் ஆட்சி நல்ல மாற்றங்களை நிகழ்த்துகிறது என்பதை எல்லா வகையிலும் சரியாக அறிந்திருப்பது ஆட்சியாளர்களின் தொழில் என்ற பொருள் விளக்கத்திற்கேற்ற வகையில், தமிழினத்தினுடைய தலைவர், மக்கள் தலைவர், முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் அவர்கள் இந்த அரசை மிக கணகச்சிதமாக, எந்தெந்த துறை, எந்தெந்த அளவுகோலில் வளர்ச்சிப்பெற வேண்டும், விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய மக்களை எப்படித் தூக்கி நிறுத்த வேண்டும் என்கிற உணர்வோடு இந்த நிதிநிலை அறிக்கையை இந்திய ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பிற மாநிலங்களெல்லாம் என்பதைவிட, உலகத்தில் இருக்கக்கூடிய அரசுகளெல்லாம் பார்த்து வியக்கிற அளவில் இந்த நிதிநிலை அறிக்கையை இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் நிதியமைச்சர் அவர்கள் மூலமாக வெளிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஓர் ஆங்கில பத்திரிகை, இந்த நிதிநிலை அறிக்கையைக் குறித்து ஒரு செய்தி சொல்லியிருக்கிறது. அதாவது, இந்த நிதிநிலை அறிக்கையை 'Checkmate' என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. எதிரிகளுக்கெல்லாம் check வைத்தாறபோல, எதிர்வருங்காலத்தில் மிகப் பெரிய வெற்றியை ஈட்டுபவருக்கு மக்களுக்கான ஓர் அறிக்கையாக இந்த நிதிநிலை அறிக்கையை தந்திருக்கிறார் என்று முதலமைச்சர் அவர்களைப் பற்றி பேசியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அப்படிப்பட்ட உணர்வோடு, 2025-2026 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசினுடைய நிதிநிலை அறிக்கை மற்றும் 2025-2026 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் இந்த அவையில் பேசுகிற வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாட்டினுடைய துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தினுடைய அமைச்சர்கள் ஐயா ஐ.பி. அவர்களுக்கும், அண்ணன்

அர. சக்கரபாணி அவர்களுக்கும், இந்த அவையினுடைய அமைச்சர் பெருமக்களுக்கும், உறுப்பினர்களுக்கும், இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய தங்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தை பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

### கடன் சதவிகிதம் குறைவு!

பொதுவாக, இந்த நிதிநிலை அறிக்கையை பொறுத்தளவில், வரவு-செலவுத் திட்டம் என்றுதான் நாம் சொல்வோம். வரவு-செலவுத் திட்டங்களுக்கு ஒரு பொது வரையறை இருக்கிறது. எவ்வாறு என்று சொன்னால், மொத்த வருவாய், வருவாய் மீதான செலவினம், கடன் பெறுகிற அளவுகோல், கடன் நிலுவை விழுக்காடு, மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தியில் வருவாய் பற்றாக்குறை, மொத்த உற்பத்தியில் இருக்கக்கூடிய நிதிப் பற்றாக்குறை. இவற்றையெல்லாம், ஒரு கட்டுக்குள் வைத்த ஓர் அறிக்கையை உருவாக்குவது என்பது நிதி மேலாண்மைக்கான சான்றாக அமையும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த வகையில், கடந்த 2021 ஆம் ஆண்டுக்குப்பிறகு, 2021ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலை. 'ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று சொல்ல வேண்டுமென்று சொன்னால், நிதியமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்தில் கடன் நிலுவைத் தொகை 128 சதவிகிதமாக இருந்ததை, இன்றைக்கு திராவிட மாடல் அரசு 93 சதவிகிதத்திற்குள்ளே கொண்டுவந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல இன்றைக்கு மொத்த உற்பத்தியிலே நிதிப் பற்றாக்குறை 4.91 என 2020-2021-ல் இருந்ததை 3 சதவிகிதமாக கொண்டு வந்திருக்கிறது. உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிலுவைக் கடன் விகிதத்தை Reserve Bank of India 28 சதவிகிதத்திற்குள் வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 26.7 சதவிகிதத்திற்குள் வைத்திருக்கிறது. வருவாய் பற்றாக்குறையைப் பொறுத்தளவில், 2020-2021-ல் 3.49 சதவிகிதமாக இருந்ததை இன்றைக்கு 1.17 சதவிகிதமாகக் குறைத்து (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ரூபாய் 41,635 கோடி என்கிற அளவிலே கொண்டு வந்திருப்பதை நாம் பார்க்க முடிகின்றது.

### பள்ளிக் கல்விக்கு ரூ.46,767 கோடி ஒதுக்கீடு!

ஒன்றிய அரசு பள்ளிக் கல்விக்கும், எழுத்தறிவுக்கும் ரூபாய் 78,572 கோடியை ஒதுக்கியிருக்கிறது. ஒட்டுமொத்த இந்தியாவினுடைய budget-ல் அது 1.4 சதவிகிதம்தான். அதேநேரத்திலே, தமிழ்நாட்டில் 2025-2026-ல் ரூ.46,767 கோடி (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாநில அரசு பள்ளிக் கல்விக்கு இன்றைக்கு ஒதுக்கியிருக்கின்றது. ஒட்டுமொத்த budget-ல் இது 11 சதவிகிதம் என்பதனை இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்றிய அரசைவிட 9.6 சதவிகிதம் பள்ளிக் கல்விக்கு நம்முடைய மாநில அரசு இந்த budget-ல் ஒதுக்கியிருக்கிறது. ஆக நிறைய செய்திகளை நாங்கள் எடுத்து வந்திருக்கிறோம். 10 நிமிடங்களுக்குள்ளே பேசி முடிக்க வேண்டுமென்றுநீங்கள் இலக்குவைத்திருக்கிறீர்கள்.

கடந்த சட்டப்பேரவைத் தொடரில் ஒரு கேள்வி நேரத்தின்போது நான் பேசுகிறபொழுது, மருத்தும் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நான் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னார். நான் என்ன கேள்வி கேட்டேன் என்றால், இன்றைக்கு புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை நாம் அதிகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக புற்றுநோய்க்கு சிகிச்சை பெறுவதற்கு காஞ்சிபுரத்தில் அனைத்து வசதிகளும் இருக்கக்கூடிய அறிஞர் அண்ணா மருத்துவமனைக்குத்தான் நாம் போக வேண்டிய நிலை இருக்கிறது. இதை மாநிலத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் முதற்கட்ட நோயின் நிலையை அறிவதற்கு ஒரு சிறப்பு பிரிவை உருவாக்கிட வேண்டுமென்று நான் ஒரு கேள்வியை முன்வைத்தேன்.

அன்றைக்கு மா.சுப்பிரமணியன் இங்கே பேசுகின்றபொழுது, இதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று சொன்னார். இந்த நிதிநிலை அறிக்கையில் அந்த அறிவிப்பு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் தலைவன் அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எதிர்காலத்திலே பெண் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய மிகப்பெரிய பிரச்சினை, இன்றைக்கு பெரிதாகப் பேசப்பட்டுக் கொண்டிருப்பது கருப்பை வாய் புற்றுநோய்.

இந்த கருப்பை வாய் புற்றுநோய் அந்த மருந்து Human Papillomavirus (HPV) என்று சொல்லப்படுகிறது. இந்த ஊசி



என்பது மருத்துவர்களுக்குத் தெரியும். குறைந்தபட்சம் ரூ.2,000-லிருந்து ரூ.12,000/- வரை ஆகும். வசதியான வர்கள்தான் அந்தத் தடுப்பூசியை போடமுடியும். அதை உணர்ந்த மக்கள் தலைவர் பெண் பிள்ளைகளினுடைய தந்தையாக இந்த அரசை இன்றைக்கு மிக நெஞ்சுரத்தோடு வழிநடத்துகிற நம் தலைவர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 36 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, அனைத்து பெண் பிள்ளைகளுக்கும் அந்தத் தடுப்பூசியை தமிழ்நாடு அரசின் சார்பில் போடுவோம் என்று இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்.

### நத்தம் தொகுதிக்கு கல்லூரி!

இன்றைக்கு நத்தம் சட்டப்பேரவை தொகுதியில் அ.தி.மு.க. உறுப்பினர் விஸ்நாதன் இருந்தாலும், எங்கள் மாவட்டத்திலே, நத்தம் தொகுதியில் மட்டும்தான் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லாமல் இருந்தது. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், உணவுத் துறை அமைச்சர் அவர்களும், நாங்களெல்லாம் வைத்த கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் நத்தம் தொகுதிக்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அறிவித்திருக்கிறார்கள். நான் ஒரு செய்தியை சொல்ல விரும்புகின்றேன். எங்கள் மாவட்டத்தில் இருக்கக்கூடிய 99 சதவிகித கல்லூரிகள் அனைத்தும் திராவிட முன்னேற்ற ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட மாடல் நாயகர் அண்ணன் தளபதி அவர்களால் கொண்டுவரப்பட்டது என்கிற வரலாற்று செய்தியைஇங்கேபதிவிடவிரும்புகின்றேன்.

நான் ஒரே ஒரு கோரிக்கை வைக்கின்றேன். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், திண்டுக்கல் நகரத்தில், கொடைக்கானல் நகரத்தில் அன்றைக்கு ஆயிரக்கணக்கானப் பேருக்கு வழங்கப்பட்ட பட்டாக்கள், இன்னும் அதை A-Register கணக்கில் ஏற்ற முடியாத நிலை இருக்கிறது. அதற்கு ஒரு சிறப்பு குழுவை நியமித்து, அவர்களுக்கும் உரிய அந்த உரிமையை வழங்க நீங்கள் உறுதி செய்யவேண்டும். அதுமட்டுமல்ல கொடைக்கானலை பொறுத்தளவில் 30 ஆண்டுகாலமாக அங்கே master plan கிடையாது. பழைய உள்ளூர் திட்டங்களின் அடிப்படையில் வீடுகள் கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மக்களுக்கு, அவர்களுடைய வீடுகள் இன்றைக்கு விதியை மீறிய கட்டடங்களாக இனம் காணப்பட்டு, நீதிமன்ற வழக்குகள் முடிந்து, இன்றைக்கு நம்முடைய அரசின் செயலாளர் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது.) அரசு முடிவெடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறது. நான் இந்த அரசிடத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது, one time regularization என்கிற ஒரு திட்டத்தைக் கொடைக்கானலுக்கு வழங்கி, அந்த மக்களுடைய வாழ்வாதாரத்தை நீங்கள் காத்திட வேண்டுமென்று, இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

### ஓசூரில் 100 ஏக்கரில் இயந்திர தொழில் பூங்கா!

அதுமட்டுமல்ல, 100 ஏக்கர் பரப்பில் ஓசூர் பகுதியில், கொங்கு மண்டலத்தில், மேற்கு மண்டலத்தில் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருந்து கேட்டிருந்தால் அது அவருக்கு மகிழ்ச்சியாக இருந்திருக்கும். வேலுமணி அவர்கள் கேட்டிருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். இன்றைக்கு ஓசூர் பகுதியிலே 100 ஏக்கர் பரப்பளவில் semiconductor இயந்திர தொழிற்பூங்காவை முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். 'Hosur Knowledge Corridor' அறிவித்திருக்கிறார். அதுமட்டுமல்ல நான் இந்த நேரத்தில் ஒன்றைமட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் துறையை பொறுத்தளவில், இன்றைக்கு முதலமைச்சர் வேளாண் உழவர் மையங்கள், ஆயிரம் உழவர் மையங்கள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் வேளாண் பட்டதாரிகள், வேளாண் துறையில் பட்டயம் படித்த பட்டயதாரர்கள் அவர்களை ஒருங்கிணைத்து உழவர்களோடு இணைந்து அந்த உழவர் மையங்களை அமைக்க அறிவித்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. அதுமட்டுமல்ல மலைவாழ் விவசாய பெருங்குடி மக்களை காப்பதற்கு ஒரு திட்டம், 63 ஆயிரம் உழவர்களை அதில் ஒருங்கிணைத்து ஒரு அற்புதமான திட்டத்தை இன்றைக்கு அறிவித்திருக்கிறீர்கள். 1.81 இலட்சம் பேருக்கு 4 ஆண்டுகளில் இலவச மின் இணைப்புகளை வழங்கி, விவசாய பெருங்குடி மக்களை காப்பாற்றியிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல, விவசாயிகள் அவர்களுடைய நிலத்தில் விதைப்பண்ணை அமைத்து, அவர்கள் உருவாக்குகிற விதைகளை, அரசே கொள்முதல் செய்யும் என்கிற ஒரு திட்டம் வரவேற்கக்கூடிய ஒன்றாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. வேளாண் பெருங்குடி மக்கள் அவர்கள் உழவு செய்து அவர்கள் விளை நிலங்களில் பெறுகின்ற விளைப்பொருட்களை அவர்கள் நுகர்வோருக்கு வழங்க, 4 ஆயிரம் நடமாடும் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விற்பனை மையங்களை வழங்குவோம், அது விவசாயிகளுக்கு வழங்குவோம் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதனை இந்த நேரத்தில் நான் பெருமையோடு பார்க்கிறேன்.

ஒரே ஒரு செய்தி, இந்த நிதிநிலை அறிக்கையை, நம்முடைய வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை நிதிநிலை அறிக்கையை ஆங்கிலப் பத்திரிகைகள் எப்படி பாராட்டியிருக்கின்றன என்று சொன்னால் The Times of India "Tamil Nadu budget balances development and welfarism, targets fiscal deficit of 3%" என்று சொல்லியிருக்கிறது. அதேபோல Deccan Chronicle "Development, education stressed in Tamil Nadu Budget" என்று சொல்லியிருக்கிறது. The Economic Times "Tamil Nadu Budget: Focus on Manufacturing and Sustainable growth" என்று சொல்லியிருக்கிறது. இங்கே பேசும்போது சொன்னார்களே, எப்படி ஒரு டிரில்லியன் டாலர் economy-ஐ அடைவீர்கள் என்று சொன்னார்கள். 'Sustainable Development Goals' இருந்தால் நிச்சயமாக அந்த இலக்கை அடைய முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதைத்தான், அதைத்தான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, நான் நிறைவாக,

**வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை**
**ஆராய்வான் செய்க வினை.**

என்கிற குறளை நான் நினைவுபடுத்தி விட்டு விடைபெற எண்ணுகிறேன். பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, அதனால் வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவனே செயலாற்றும் திறனுடைய தலைவர் ஆவார் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற குறளுக்கேற்ப தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், நம்முடைய மக்கள் தலைவர், அண்ணன் தளபதியார் அவர்கள், இன்றைக்கு ஒன்றிய அரசு நிதி வழங்குவதில், திட்டங்களை நாம் செயல்படுத்துவதில் எவ்வளவு இடையூறுகளை ஏற்படுத்தினாலும் அத்தனைகளை உடைத்தெறிந்து மக்களாட்சி தத்துவத்தின் மாண்பு நிறைந்த அரசாக நம் தமிழ்நாட்டு அரசை வழி நடத்திக் கொண்டிருக்கிறார்.

தமிழுயர்ந்தால் தமிழ்நாடு
தானுயரும் அறிவுயரும்
அறமும் ஓங்கும்
இமயமலை போலுயர்ந்த
ஒருநாடும் தன்மொழியில்
தாழ்ந்தால் வீழும்

தமிழுக்கு குரல் கொடுங்கள், நிறுவிடுங்கள் தமிழ் பள்ளி, கல்லூரி, தமிழ் ஏடு பலபலவும் நிலைப்பச் செய்வர் என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வரிகளுக்கேற்ப தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் கண்ணை இமை காப்பதுபோல, கண்ணை இமை காப்பதுபோல, மக்கள் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் இந்த அரசையும், இந்த நாட்டையும், மக்களையும் காத்து கொண்டிருக்கிறார்.

### தொகுதிக் கோரிக்கைகள்:

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற முதல் ஆண்டில் பழனியில் சித்த மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுமென அறிவிப்பு செய்தது. அதன் அடிப்படையில் சித்த மருத்துவமனை இயங்கத் தொடங்கி 24 மாதங்கள் நிறைவடைந்திருக்கும் வேளையில், ஏற்கனவே 38 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டுள்ளது. 60 பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்க வழி செய்ய (Aided Approval) அரசினிடத்தில் கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. விரைந்து அனுமதி வழங்கி கட்டட பணிகளை தொடங்க வேண்டும்.

### பச்சையாறு அணை திட்டம்!

பழனி அருகே காவலப்பட்டியில் பல ஆண்டுகளாக அப்பகுதி மக்களின் முக்கிய கோரிக்கையான "பச்சையாறு அணை" திட்டத்தை சமூக பார்வையுடன் (Social View) மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி சட்டமன்றத் தொகுதி, ஆயக்குடி தேர்வு நிலை பேரூராட்சியில் தற்போது 2024-ன்படி சுமார் 50,000-ற்கும் மேலான மக்கள் வசித்து வருகிறார்கள். மொத்த வீட்டு குடிநீர் இணைப்பு 4,806 உள்ளது. குடிநீர் ஆதாரமாக வரதமாநதி அணையிலிருந்து குடிநீர் எடுத்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு 19.50 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரக்கூடிய பைப்லைன் மற்றும் மேல்நிலைத் தொட்டி 15-12-1986 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பழைய ஆயக்குடி, புது ஆயக்குடி, ஓபுளாபுரம் ஆகிய பகுதிகளில் தலா 3 லட்சம் அளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் புதிய பைப்லைன் ஆகியவற்றும் அமைத்துத்தர வேண்டும்.

பழனி, சண்முகா நதியிலிருந்து வண்டி வாய்க்கால், நெய்க்காரப்பட்டி, கரடிக்கூட்டம், பாப்பம்பட்டி, அய்யம்பாளையம், கொழுமம் வழியாகச் செல்லும் சாலையினை அகலப்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டும்.

சர்வதேச சுற்றுலாத் தளங்களில் ஒன்றான கொடைக்கானலில் அடிக்கடி ஏற்படும் கடும் போக்குவரத்து நெரிசல்களால் பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். அதை சரி செய்யும் பொருட்டு கொடைக்கானலுக்கு "புதிய மாற்று வழிச் சாலை" உருவாக்கித்தர வேண்டும்.

மலைப்பிரதேசமான கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளின் அதிக வரவினால் வாகனங்கள் நிறுத்துவதற்கு குறைவான இடவசதி உள்ளதால் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய பல் அடுக்கு வாகன நிறுத்தம் (Multi level Car Parking) அமைத்துக் கொடுக்க வேண்டும்.

கடந்த 30 ஆண்டுகளாக கொடைக்கானலுக்கு முழுமைத் திட்டம் (Master Plan) இல்லாததால் ஏற்கனவே உள்ள பழைய உள்ளூர் திட்டங்களின் அடிப்படையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டடங்கள் கட்டப்பட்டு உள்ளதால் அவைகள் விதிகளை மீறிய கட்டடங்களாக இனம் காணப்பட்டுள்ளது. அதனால் அங்குள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருமுறை வரன்முறை படுத்துதல் (one time Regularization) மூலம் மக்களின் பாதுகாப்பு காத்திட வேண்டும்.

கொடைக்கானல் வட்டத்தில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு வழங்கப்பட்ட DKT பட்டாக்களின் தெளிவற்ற காரணங்கள் மற்றும் குளறுபடிகள் இருக்கின்ற சூழ்நிலைகளை களைந்திட, மறு அளவீடு (Re survey) மற்றும் "ஒருமுறை வரையறை" (One time Regularization) செய்து அம்மக்களின் வாழ்வாதாரத்தை காக்க வேண்டும்.

### புதிய பேருந்து வழித்தடங்கள்:

கொடைக்கானலில் இருந்து பழனி மலைப்பிரிவு பெருமாள்மலை, மச்சூர், பண்ணைக்காடு, தாண்டிக்குடி பிரிவு, மங்களம்கொம்பு, தடியன்குடிசை, குப்பம் மாள்பட்டி, கே.சி.பட்டி, பெரியூர், பாச்சலூர் வழியாக ஒட்டன்சத்திரத்திற்கு புதிய பேருந்து வழித்தடம் வழங்க வேண்டும்.

கொடைக்கானலில் இருந்து பழனி மலை பிரிவு வடகவுஞ்சி, பெரும்பள்ளம், செம்பிரான்குளம் வழியாக ஒட்டன் சத்திரத்திற்கு புதிய சிற்றுந்து வழித்தடம் வழங்க வேண்டும்.

கொடைக்கானலிலிருந்து பழனி மலை பிரிவு, பேத்துப்பாறை, பாரதி அண்ணா நகர், கணேசபுரம், அஞ்சு வீடு ஆகிய கிராமங்களுக்கு புதிய சிற்றுந்து வழித்தடம் வழங்கிட வேண்டுகிறேன்.

கொடைக்கானலிலிருந்து பூம்பாறை, பழம்புத்தூர், புதுப்புத்தூர், விடுதலை நகர், ஏ.காலனி, பி.காலனி வழியாக கூக்காலுக்கு புதிய சிற்றுந்து வழித்தடம் வழங்க வேண்டும்.

கிளாவரையில் இருந்து கொடைக்கானல் வழியாக பழனிக்கு புதிய பேருந்து வழித்தடம் அமைத்துத்தர வேண்டும்.

### குதிரையாற்றின் குறுக்கே உயர் மட்ட பாலம்!

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆண்டிபட்டி கிராமம், குதிரையாறு அணையின்கீழ், குதிரையாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைத்திட வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பழனி கிராமத்தில் வரட்டாற்றின் குறுக்கே அமைந்துள்ள உப்புச்சட்டி அணைக்கட்டை புனரமைக்க வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், அய்யம்புள்ளி கிராமத்தில் உள்ள கண்ணாடி பெருமாள்குளம், பெரிய அய்யம்புள்ளிகுளம், சின்ன அய்யம் புள்ளிகுளம், பெரிய ஒட்டுக்குளம் மற்றும் சின்ன ஒட்டுக்குளத்தின் சேதமடைந்த மதகுகள், கலிங்கு, வெளிபோக்கி ஆகியவற்றை புதுப்பித்தல் மற்றும் வரத்து வாய்க்கால் புனரமைக்க வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், வரதமாநதி அணை பாசனத்திற்குட்பட்ட பெரியகுளம், வீரகுளம், ஊமைசேர்வை காரன்குளம், தட்டான்குளம் மற்றும் கோதைமங்களம் புதுக்குளத்தின் சேதமடைந்த மதகுகள், கலிங்கு, வெளிபோக்கி புதுப்பித்தல் மற்றும் வரத்து வாய்க்கால் புனரமைக்க வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், இரவிமங்களம் குளம், புதுக்குளத்தில் உள்ள மதகுகள் மற்றும் கலிங்குகளை புதுப்பித்தல் மற்றும் கரைகளை பலப்படுத்துதல் மற்றும் புனரமைக்க வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமம், குரும்பபட்டி அருகில் பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமம், பாலாறு அணைக் கட்டு வாய்க்காலைப் புனரமைக்க வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பழனி கிராமத்தில் உள்ள வையாபுரி வாய்க்காலின் சரகம் 5,585 மீட்டரில் உள்ள வெளிபோக்கி புதுப்பிக்க வேண்டும்.

கொடைக்கானல் நகராட்சிக்கு குடிநீர் ஆதாரமாக விளங்கும் தலைமை நீர்த்தேக்கத்தில் (மனோரஞ்சிதம்) மண் அணையினை சுற்றிலும் அகலப்படுத்தி கூடுதல் நீரினை தேக்கி வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீர்த்தேக்கத்தில் (மனோ ரஞ்சிதம்) மண் அணையினை சுற்றிலும் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

இவ்வாறு ஐ.பி.செந்தில்குமார் பேசினார்.

---

## நாளை முதல் இரு நாட்கள் நடைபெறுகிறது!

# சென்னை - தமிழ்நாடு இசைக் கல்லூரியில் தமிழிசை விழா!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை, மார்ச் 18-

சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 2024 - 2025 ஆம் கல்வியாண்டில் 19.03.2025 மற்றும் 20.03.2025 ஆகிய இரண்டு நாட்கள் தமிழிசை விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேருரையாற்றுகிறார்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், சிறப்புரையாற்றுகிறார்.

கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் சே.ரா.காந்தி மற்றும் அருங்காட்சியங்கள் துறை இயக்குநர் கவிதா ராமு வாழ்த்துரை வழங்குகிறார்.

இவ்விழாவிற்கு வரவேற்புரை வழங்குவதற்கு முனைவர்.பா.சாய்ராம் முதல்வர் (பொ), நன்றியுரை வழங்குவதற்கு ஆ.சரவணன் மிருதங்க விரிவுரையாளர் (சி.நி) ஆகியோர் வழங்குகின்றனர்.

இவ்விழாவில் புகழ் பெற்ற இசை வித்தகர்களின் இசை நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளன.

19.3.2025 புதன்கிழமை

நாதசுர இசை நிகழ்ச்சி: காலை 10.30 முதல் 12.30 மணி - கலைச் சுடர்மணி மயிலை பி.வரமூர்த்தி, குன்றத்தூர் டி. வெங்கடேசன் - நாதசுவரம்,

தவில் செல்வம் திருக்கடையூர் டி.ஜி.பாபு - சிறப்பு தவில், தவில் ஸ்வர்ண நாதமணி ஈகுவார் பாளையம், இ.வி.கணபதி - தவில்.

பரதநாட்டிய நிகழ்ச்சி: பிற்பகல் 2.00 முதல் 4.00 மணி - கலை மாமணி திருமதி. பத்மலட்சுமி சுரேஷ் - குழுவினரின் பரதநாட்டியம்

20.3.2025 வியாழக்கிழமை

குரலிசை நிகழ்ச்சி: காலை 10.30 முதல் 12.30 வரை, சங்கீதா கலாபாரதி அஸ்வத் நாராயணன் - பாட்டு, சாய்ரக்ஷித் - வயலின், கலைமாமணி சங்கீத கலாநிதி, திருவாரூர் பக்தவச்சலம் - மிருதங்கம், கலைமாமணி பி.எஸ். புருஷோத்தமன் - கஞ்சிரா.

வயலின் நிகழ்ச்சி: பிற்பகல் 2.00 முதல் 4.00மணி, சுனாத கலாநிதி டி.வி. ராமானுஜாசார்லு - வயலின், பெங்களூர் வி.பிரவின் - மிருதங்கம், மைசூர் எம். குருராஜ் - முகர்சிங்.

மேலும், கல்லூரியின் 2024-2025 ஆம் ஆண்டுக்கான ஆண்டுவிழா மற்றும் விளையாட்டுப்போட்டிகளின் பரிசளிப்புவிழா ஆகியன 21.3.2025 அன்று நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கலை பண்பாட்டு இயக்கக இணை இயக்குநர் செல்வி.சி.கீதா பி.எஸ்.சி., எம்.ஏ., விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு பரிசுகள் வழங்கி விழா தலைமையுரையாற்றுகிறார்.

19.03.2025 முதல் 21.03.2025 முடிய தமிழிசை விழா மற்றும் ஆண்டுவிழாவில் இசை வல்லுநர்களின் இசை நிகழ்ச்சிகள் மற்றும் மாணாக்கர்களின் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா அகியன நடைபெற உள்ளது. அனைவரும் வந்து விழாவினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

## மக்கள் தொகை அதிகமாக உள்ள


# எழும்பூர் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுமா?

## பேரவையில் – இ.பரந்தாமன் கேள்வி!

சென்னை, மார்ச்.18-

எழும்பூர் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுமா என்று பேரவையில் எழும்பூர் தொகுதி உறுப்பினர் இ.பரந்தாமன் கேள்வி எழுப்பினார். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் வருமாறு :

**இ.பரந்தாமன்:** எழும்பூர் வட்டம், எழும்பூர் 1, எழும்பூர் 2 மற்றும் புலியூர் village போன்ற மிக மக்கள் தொகை அதிகமாக இருக்கக்கூடிய ஒரு தாலுகாவாக இருக்கிறது. இதனால், அதிகாரிகளுக்கு பணி சுமை இருக்கிறது. மேலும், சான்றிதழ் வழங்குவதற்கு தாமதம் ஏற்படுகிறது, காரணம் நிறைய மக்கள்



தொகை (population) இருக்கிறது. land areas அதிகமாக இருக்கிறது. அதனால், எழும்பூர் தாலுகா இரண்டாக பிரிக்கபடுமா?

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன்:** இதை தான் முதலிலே சொன்னேன் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர் தொகுதியிலே தாலுகாக்களை பிரிக்க வேண்டும் என்றும், RDO Officeஐ பிரிக்க வேண்டும் என்றும், கேட்டிருக்கிறார்கள். குறிப்பாக சென்னையைப் பொறுத்த அளவிற்கு ஒவ்வொரு தாலுகாவிலும் நாம் எதிர்பார்த்ததை விட அதிகபடியான மக்கள் தொகை இருக்கிறது. நிர்வாகத்திலும் சிரமம் இருப்பதை அரசாங்கம் உணர்ந்து இருக்கிறது. தகுந்த ஏற்பாடுகள் நிச்சயமாக அரசாங்கம் செய்யும்.


இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

## கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# சென்னை மேற்கு மாவட்டம் நடத்தும் தொடர் 72 பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!



**இன்று (18-03-2025 - செவ்வாய்க்கிழமை) நடைபெறும் பொதுக் கூட்டங்கள் விபரம் வருமாறு:**

| வ. எண் | வட்டம்/ அணி | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 105அ | இரா. பொன்னுரங்கம் வட்டக் கழக செயலாளர் | "D" பிளாக், சோழன் தெரு M.M.D.A. காலனி அரும்பாக்கம் | தக்கோலம் தேவபாலன் தலைமைக்கழக பேச்சாளர் செ.ஜோதி இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர் / தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.